**<u>ஹால்டன் டிஸ்ட்ரிக்ட் ஸ்கூல் போர்டு</u>** *<u>நிர்வாகச் செயல்முறை</u>*

**தலைப்பு:** **தலையில் பேன் (பெடிக்குளோசிஸ்) (Pediculosis)**
**நடைமுறைப்படுத்தப்பட்டது:** **பிப்ரவரி 2009; 2012; 2016**
**மீளாய்வு/திருத்தம் தேதி:** **அக்டோபர் 2017**
**பொறுப்புடமை:** **கல்விக் கண்காணிப்பாளர்**

## கொண்டுள்ள நோக்கம்:

பள்ளிகளில் தலையில் பேன் (பெடிகுளோசிஸ்) இருக்கும் குழந்தைகளிடம், பேன், ஈறுகள்-இருக்கக்கூடாது என்னும் அணுகுமுறையை தி ஹால்டன் டிஸ்ட்ரிக்ட் ஸ்கூல் போர்ட் ஆதரவிக்கிறது.

## செயல்முறைகள்:

பெற்றோர்கள் தங்களது குழந்தைகளின் தலையில் பேன் உள்ளதா என, குறிப்பாக கோடை, பனிக்காலம் மற்றும் மார்ச் தொடக்க காலம் ஆகிய பருவகாலங்களைத் தொடர்ந்து, எவ்வாறு சோதித்து தெரிந்து கொள்ள முடியும் என்பது பற்றி, பள்ளியின் செய்திக்கடிதத்தில் ஒரு கட்டுரையை உள்ளடக்குவதற்கு, இந்த போர்டு பள்ளிகளுக்கு, குறிப்பாக ஆரம்பப் பள்ளிகளுக்கு பரிந்துரைக்கிறது. அவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டதும், சந்தேகப்படும் ஒவ்வொரு தலைப்பேன் உள்ள குழந்தையும் பிரித்தறியும் (ஸ்க்ரீனிங்) முகமைக்கு கண்டிப்பாகப் பரிந்துரைக்கப்பட வேண்டும். அந்த முகமையானது அந்த நிலைமையை உறுதிப்படுத்தும். பிரித்தறியும் முகமை பள்ளிமுதல்வருடன் கலந்தாலோசித்து, தலைப்பேன் உள்ளவரது (உள்ளவர்களின்) பெற்றோர்கள் ஒவ்வாருவருக்கும் தகவல் தெரிவிக்கும். பள்ளிமுதல்வரால் கையொப்பமிடப்பட்ட கடிதம் (இணைப்பு A), ஒவ்வொரு குழந்தையின் வீட்டிற்கும் அனுப்பி வைக்கப்பப்படும். குழந்தைகள் திரும்பவும் வகுப்பிற்கு வருவதற்கு முன்பாக, குழந்தைகளிடம், பிரித்தறியும் முகமையினால் அல்லது ஒரு மருத்துவப் பயிற்சியாளரால் கையொப்பம் இடப்பட்ட, பள்ளிக்குத்-திரும்பச்-செல்வதற்கு அளிக்க வேண்டிய படிவம் இருக்க வேண்டும் என்று பெற்றோர்களுக்குத் தெரிவிக்கப்படும்.

## 1. வகுப்பறைப் பரிசோதனை

- வகுப்பறைப் பரிசோதனைக்கு வசதியாக, ஆசிரியர் தன் வகுப்பை ஒழுங்குபடுத்தி மேற்பார்வை செய்வார் மற்றும் பள்ளிக்கு வராத மாணவர்களின் பெயர் உள்ள வகுப்பறைப் பட்டியலை, அந்த பிரித்தறியும் முகமைக்கு அளித்திடுவார்.
- மத ரீதியில் தலையை மூடிக்கொள்ள வேண்டியுள்ள மாணவர்களுக்கு சில சமரசங்கள் தேவைப்படலாம் என்பதை அந்த பிரித்தறியும் முகமை அறிந்திருப்பதை பள்ளி முதல்வர் உறுதி செய்வார்.

- தலையில் பேன் இருப்பதற்கான நேர்மறை சாட்சி பள்ளி முதல்வருக்குத் தெரிவிக்கப்பட்டால், அந்த வகுப்பில் இருக்கும் அனைத்து மாணவர்களையும் அவர்களது உடன்பிறப்புகளையும் துரிதமாக ஆய்வு செய்து முடிப்பதற்கு, பிரித்தறியும் முகமைக்கு அவர் ஏற்பாடு செய்வார்.
- பிரித்தறியும் முகமை தாங்கள் என்ன செய்யப் போகிறோம் என்பதை ஆசிரியருக்கும் வகுப்பிற்கும் விளக்கிடும்.
- பிரித்தறியும் முகமை எந்த மாணவர்களுக்குத் தலையில் பேன் இருக்கிறது என்று பள்ளி முதல்வருக்குத் தெரிவிக்கும்.
- அனைத்து நேர்மறை மாணவர்களுக்கும், பள்ளி முதல்வர், ஒரு அறிவிப்புக் கடிதத்தை (இணைப்பு A) நிறைவு செய்வார். அந்த குழந்தையுடன், அந்த அறிவிப்புக் கடிதமும் வீட்டிற்குச் செல்லும்.
- ஒரு வேளை, பள்ளியில் பெருமளவில் மாணவர்களுக்கு தலையில் பேன் இருந்தால், பள்ளி முதல்வர் கடிதம் மூலமாக அனைத்து பெற்றோர்களுக்கும் அறிவிப்பது பரிந்துரைக்கப்படுகிறது.

## 2. சிகிச்சைக்குப் பிறகு திரும்பி வருவதற்கான செயல்முறைகள்

பிரித்தறியும் முகமை மூலமாக மீண்டும் சோதிக்கப்பட்ட பிறகு, அந்த மாணவர் வகுப்புக்குத் திரும்பி வரலாம் என்பதைச் சுட்டிக் காட்டும் வகையில் வழங்கப்பட்ட படிவத்தில், பிரித்தறியும் முகமையின் தனிப்பட்ட சேவைகளின் பணியாளரின் கையொப்பத்தைப் பெற்றுக் கொண்டு, மாணவர்கள் பள்ளிக்குத் திரும்பலாம். மாற்றாக, பெற்றோர்கள் தங்களது குழந்தையின் தலையை ஒரு மருத்துவப் பயிற்சியாளரால் அல்லது குறைந்தபட்சம் தனிப்பட்ட சேவைப் பணியாளர் சான்றளிப்பு கொண்ட பதிவு செய்யப்பட்ட பேன் பிரித்தறியும் முகமை ஊழியர் ஒருவரிடம் சோதிக்கலாம்.

## இணைப்பு A

(மாதிரி) (பள்ளியின் முகவரி கொண்ட கடிதம்)
(தேதி)

அன்புள்ள (பெற்றோரின் /காப்பாளரின் பெயர்):
இந்த பள்ளியில் தலைப்பேன் இருக்கும் சந்தேகம் காரணமாக, சமீபத்தில் ஒரு ஆரோக்கிய பிரித்தறியும் சோதனை வேண்டப்பட்டது. அதன் விளைவாக, உங்களது குழந்தை பாதிக்கப்பட்டுள்ளது என்று காணப்பட்டது. *அவரது தலைச்சருமத்தில் பேன் மற்றும் /அல்லது ஈறுகள் கண்டுபிடிக்கப்பட்ட காரணத்தால் உங்களது குழந்தை பள்ளியில் இருந்து விலக்கப்பட்டு* இருக்கிறது.
உங்களுக்குத் துணை புரிவதற்காக, தலைப்பேன் பற்றிய ஒரு தகவல் தொகுப்பு இந்த பள்ளியில் கிடைக்கிறது. முறைப்படியான சிகிச்சையைத் தீர்மானிப்பதற்கு, தயவுசெய்து ஒரு மருந்தாளுநரை அல்லது உங்களது குடும்ப மருத்துவரை ஆலோசித்திடுங்கள்.
உங்களது குழந்தையின் கேசத்தில் இருந்து பேன் மற்றும் ஈறுகள் அனைத்தும் அகற்றப்பட்டதும், தயவுசெய்து *வீ கேர் ஹோம் ஹெல்த் சர்வீசஸ் ஹாட்லைனை* **(905) 507-6562** என்ற எண்ணில் அல்லது **1-855-507-6562** என்ற எண்ணில் அழைத்திடுங்கள்.
உங்களது குழந்தைக்கு ஒரு மறுசோதனை நடத்துவதற்கு, உங்களது குழந்தையை நீங்கள் எடுத்துச் செல்ல வேண்டிய இடங்கள் பற்றி அந்த வரவேற்பாளர் உங்களுக்கு அறிவுரை தருவார். அந்த இடத்திற்கு உங்களால் செல்ல முடியவில்லை என்றால், *வீ கேர் ஹோம் ஹெல்த் சர்வீசஸின்* மாற்று இடங்களுக்காக (மதியவேளை) தொலைபேசியில் அழைத்திடுங்கள்.
மாற்றாக, பெற்றோர்கள் தங்களது குழந்தையின் தலையை ஒரு மருத்துவப் பயிற்சியாளரால் அல்லது குறைந்தபட்சம் தனிப்பட்ட சேவைப் பணியாளர் சான்றளிப்பு கொண்ட பதிவு செய்யப்பட்ட பேன் பிரித்தறியும் முகமை ஊழியர் ஒருவரிடம் சோதிக்கலாம்.

*வீ கேர் ஹோம் ஹெல்த் சர்வீசஸின்* தனிப்பட்ட சேவைப் பணியாளரால் (பிஎஸ்டபிள்யூ) (PSW), பதிவு செய்யப்பட்ட மற்றொரு பேன் பிரித்தறியும் முகமையால், அல்லது ஒரு மருத்துவப் பயிற்சியாளரால் மீளாய்வு செய்யப்படும் பொழுது, உங்களது குழந்தையின் கேசத்தில் பேன், முட்டைகள் மற்றும் ஈறுகள் அழிந்துவிட்டன என்றால், உங்களது குழந்தை பள்ளிக்குத் திரும்புவதற்கு அனுமதிக்கின்ற ஒரு படிவம் உங்களுக்குத் தரப்படும். உங்களது குழந்தையின் கேசத்தில் இன்னமும் பேன், முட்டைகள் மற்றும் ஈறுகள் இருக்கின்றன என்றால், கூடுதல் சிகிச்சைக்கான உதவி மற்றும் பரிந்துரைகளை அந்த பிரித்தறியும் முகமை (பிஎஸ்டபிள்யூ) உங்களுக்கு அளித்திடுவார்.
உண்மையுள்ள,
(பள்ளி முதல்வரின் பெயர்)

**<u>இணைப்பு</u> B:**

(மாதிரி)

(பள்ளியின் முகவரி கொண்ட கடிதம்)

(தேதி)

அன்புள்ள (பெற்றோரின் /காப்பாளரின் பெயர்):

கடந்த வாரத்திற்குள், உங்களது குழந்தையின் வகுப்பில் உள்ள சில குழந்தைகளுக்கு தலையில் பேன் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. உங்களது குழந்தையின் கேசத்தை நீங்கள் தினந்தோறும் தொடர்ந்து பரிசோதிப்பது அறிவுறுத்தத்தக்கது.

தலையில் பேன் மொய்த்திருப்பது சுத்தமான நிலையின் பிரதிபலிப்பு அல்ல; இது திரும்பத் திரும்ப நேர்கின்ற பிரச்சினை ஆகும், இது நேரடித் தொடர்புள்ள எவரையும் பாதிக்கக்கூடும்.

உங்களது குழந்தைக்கு தலையில் பேன் இருக்கின்றன என்பதை நீங்கள் கண்டுபிடித்தால், நீங்கள் பள்ளியைத் தொடர்பு கொள்வது பரிந்துரைக்கப்படுகிறது. தலைப்பேன்களின் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு இந்த தகவல் அவசியமாகும். தலையில் பேன் இருப்பது காணப்படும் குழந்தைகள், பள்ளியில் இருந்து விலக்கப்படுவார்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட சிகிச்சையைப் பின்பற்றும்படி அந்த பெற்றோர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

*வீ கேர் ஹோம் ஹெல்த் சர்வீசஸி*னால் சோதிக்கப்பட்டதும் மாணவர்கள், பள்ளிக்குத்-திரும்பச்-செல்வதற்கு அளிக்க வேண்டிய படிவத்தில் அவர்களிடம் ஒரு கையொப்பம் பெற்றுக் கொண்டு பள்ளிக்குத் திரும்பலாம். மாற்றாக, பெற்றோர்கள் தங்களது குழந்தையின் தலையை ஒரு மருத்துவப் பயிற்சியாளரால் அல்லது குறைந்தபட்சம் தனிப்பட்ட சேவைப் பணியாளர் சான்றளிப்பு கொண்ட பதிவு செய்யப்பட்ட பேன் பிரித்தறியும் முகமை ஊழியர் ஒருவரிடம் சோதிக்கலாம்.

பதிலளிக்கப்படாத கேள்விகள் எதுவும் உங்களிடம் இருந்தால், தயவுசெய்து பள்ளியில் என்னை அழைத்திடுங்கள்.

உண்மையுள்ள,

(பள்ளி முதல்வரின் பெயர்)

## இணைப்பு C

## அறிமுகம்

தலைப்பேன் (பெடிக்குளோசிஸ்) கட்டுப்பாட்டில், வகுப்பறையில் பிரித்தறியும் சேவையை அளித்திடுகின்ற ஒரு தனிப்பட்ட செவிலியர் முகமையின் சேவைகளின் ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு உள்ளடங்குகிறது.

## பங்குகளும் பொறுப்புகளும்

### 1. பொது சுகாதார செவிலியர் (905) 825-6000

- வேண்டுகோளின் பேரில், தலைப்பேன் தொடர்பான தற்பொழுதைய விஷயங்கள் பற்றி, ஊழியர்களுடன் ஆலோசனை சேவை அளிக்கிறது
- தலைப்பேன் பற்றிய தகவல்களை ஊடகங்களுக்கு அளிக்கிறது.

### 2. பள்ளி முதல்வர்

- பள்ளிச் சூழலில் தலைப்பேன் கட்டுப்பாட்டிற்கான தடுப்பு நடவடிக்கைகளை ஊக்குவிக்கிறது மற்றும் நிறுவுகிறார்.
- துரிதமான வகுப்பறைச் சோதனைக்காக, தனியார் பிரித்தறியும் முகமையிடம் தலைப்பேன் இருப்பது பற்றி சந்தேகப்படுவதை /உறுதி செய்யப்பட்டதை தெரிவிக்கிறார்.
- மத ரீதியில் தலையை மூடிக்கொள்ள வேண்டியுள்ள குழந்தையின் (குழந்தைகளின்) பெற்றோருடன் (பெற்றோர்களுடன்) சமரசங்கள் பற்றி விவாதிப்பதற்காக, தொடர்பு கொள்கிறார்.
- பேன் பீடிப்பு பற்றி அடையாளம் காணப்பட்ட அந்த குழந்தையின் பெற்றோர் (பெற்றோர்கள்) தெரிவிக்கப்படுவதையும் பள்ளிக்குத் திரும்புவதற்கான தேவைப்பாடுகள் குறித்து தகவல் தெரிவிக்கப்படுவதையும் உறுதி செய்கிறார்.
- பேன் பீடிப்பு பற்றி அடையாளம் காணப்பட்ட குழந்தையை விலக்குகிறார்.
- சிகிச்சையைத் தொடர்ந்து, மற்றும் பேன் ஈறுகளும் அழிந்து விட்டன என்று அந்த பிரித்தறியும் முகமையால் அல்லது மருத்துவப் பயிற்சியாளரால் தரப்பட்ட, எழுதப்பட்ட உறுதியாக்கத்தைப் பெற்றுக் கொண்டு, அந்த குழந்தை வகுப்பில் மறுபடியும் நுழைவதற்கு அனுமதிக்கிறார்.

### 3. ஆசிரியர்

- வகுப்பறையில் தலைப்பேன் கட்டுப்பாட்டிற்கான தடுப்பு நடவடிக்கைகளை முனைப்பாக ஊக்குவிக்கிறார் மற்றும் நிறுவுகிறார்
- தலைப்பேன் பீடிப்பைச் சுட்டிக் காட்டுகின்ற அறிகுறிகள் பற்றிய விழிப்புணர்வு கொண்டுள்ளார் (இணைப்பு D)
- மத ரீதியில் தலையை மூடிக்கொள்ள வேண்டியுள்ள, வகுப்பு மாணவர்களுக்கு சமரசங்கள் தேவைப்படுவது பற்றி, பள்ளிமுதல்வருக்கு தெரியப்படுத்துகிறார்

- ஒரு சந்தேகப்படும் பீடிப்பு பற்றி பள்ளிமுதல்வருக்கு தெரியப்படுத்துகிறார்
- தலைப்பேன் பற்றிய அச்சம் மற்றும் தவறான தகவல் ஆகியவற்றின் அளவைக் குறைப்பதற்காக, கல்வி வாய்ப்புகள் மற்றும் ஆதார வளங்களை அளிப்பதற்காக பெற்றோர்களுடன் தொடர்பு கொள்கிறார்.

### 4. பெற்றோர்/காப்பாளர்

- தலைப்பேன் பீடிப்பைச் சுட்டிக் காட்டுகின்ற அறிகுறிகள் பற்றிய விழிப்புணர்வு கொள்வது
- ஒரு சாத்தியமான பேன் பீடிப்பு இருக்கிறதா என்று பார்ப்பதற்காக குழந்தையின் தலையை வாரம் ஒரு முறை பரிசோதிப்பது, குறிப்பாக பள்ளியாண்டின் துவக்கத்தில், பள்ளி விடுமுறைக்குப் பிறகு மற்றும் நோய்த்தாக்கத்தின் பொழுது
- ஒரு தடுப்பு நடவடிக்கையாக, குழந்தை தனது கேசத்தை சீப்பினால் மென்மையாக வாரிக் கொள்வதை /சீவுவதை ஊக்குவிப்பது
- பேன் பீடிப்பு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டால், அந்த பள்ளிக்கும் மற்றும் பிற சாத்தியமான சமுதாயத் தொடர்புகளுக்கும் தெரிவிப்பது
- சிகிச்சை முறைகள் மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்வது
- ஒரு மறுசோதனைக்காக, அந்த குழந்தையை பிரித்தறியும் முகமையிடம் அல்லது மருத்துவப் பயிற்சியாளரிடம் கொண்டு செல்வது
- பிரித்தறியும் முகமை அல்லது மருத்துவப் பயிற்சியாளர், அந்த குழந்தை பள்ளிக்குத் திரும்பலாம் என்பதைச் சுட்டிக் காட்டுகின்ற மறுபரிசோதனைப் படிவத்தை பள்ளிமுதல்வரிடம் அளிப்பது.
-

### 5. தனியார் முகமை ஊழியர்கள்

- பேன் பீடிப்பு இருக்கிறது என்று ஒரு பள்ளியால் அறிவிக்கப்படுவதற்கு, சாத்தியமான அளவில் துரிதமாக பிரதிவினை புரிகிறார்
- வகுப்பறையைத் துரிதமாக பரிசோதிப்பதற்காக, பள்ளிமுதல்வருடன் சேர்ந்து நேரம் மற்றும் ஏற்பாடுகளைச் செய்கிறார்
- பள்ளிமுதல்வரால் குறிப்பிட்டபடி, மத ரீதியில் தலையை மூடிக்கொள்ள வேண்டியுள்ள, மாணவர்களுக்கு சமரசங்கள் மேற்கொள்கிறார்
- பரிந்துரைக்கப்பட்ட சிகிச்சை முறைகளை, பெற்றோருக்குத் தெரிவிக்கிறார்
- அந்த குழந்தைக்கு நேரிடும் தடுமாற்றம் எதையும் குறைக்கும் வகையிலும், அந்த பெற்றோருக்கு ஏற்படும் மனக்கலக்கத்தை தீர்ப்பதிலும், பள்ளி ஊழியர்களுடன் நெருக்கமாகப் பணி புரிகிறார்
- ஈறு மற்றும் பேன் அனைத்தும் அழிந்த பிறகு, ஒரு கையொப்பமிட்ட மீள்-அனுமதிப் படிவத்தை, பள்ளிக்கு கொண்டு செல்லும் வகையில், அந்த பெற்றோருக்கு அளிக்கிறார்.

### 6. பள்ளி நிர்வாகத்துடன் ஒத்துழைப்பில், முகமை ஊழியர்களுக்கான பிரித்தறியும் நெறிமுறை

தலைப்பேன் உள்ளன என்று ஒரு குழந்தை அல்லது குழந்தைகளுக்கு அடையாளம் காணப்படும் பொழுது:

- அந்த குழந்தையின் வகுப்பில் உள்ள குழந்தைகள் அனைவரையும் பரிசோதிப்பது
- ஒரு குழந்தையின் தலையில் பேன் இருப்பது அடையாளம் காணப்பட்டால், அதன் உடன்பிறந்தவர் படிக்கின்ற வகுப்பில் உள்ள குழந்தைகள் அனைவரையும் பரிசோதிப்பது

தலைப்பேன் இருப்பதாக பத்து அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தைகள் அடையாளம் காணப்பட்டால்:

- அந்த பள்ளியில் உள்ள கின்டர்கார்ட்டன் முதல் நான்காம் கிரேடு வரை உள்ள வகுப்புகள் அனைத்தையும் பரிசோதிப்பது
- மேலே விளக்கியவாறு, அடையாளம் காணப்பட்ட குழந்தைக்கு (குழந்தைகளுக்கு) தொடர்பான பிற வகுப்புகளையும் பரிசோதிப்பது

### 7. செயல்முறை

- சாத்தியம் என்றால், நல்ல வெளிச்சமான நிலைமைகளையும் அந்தரங்கத்தையும் உறுதி செய்யுங்கள்
- ஒரு ஜோடி அப்ளிகேட்டர்களைப் பயன்படுத்தி, முடிக்கற்றைகளைத் தனித்தனியாகப் பிரித்திடுங்கள்
- பயன்படுத்தியதைத் தொடர்ந்து, அப்ளிகேட்டர்களை அகற்றி விடுங்கள்
- தலைச்சருமம் 1 செமீக்கு (1/2 அங்குலம்) உள்ளாக, உயிருள்ள பேன் அல்லது உயிர்வாழும் முட்டைகளால் மொய்த்திருப்பது காணப்பட்டால் மட்டுமே, அந்த குழந்தை பேன் பீடிக்கப்பட்டு இருக்கிறது என்று அடையாளம் காணுங்கள்
- பெற்றோருக்கு (பெற்றோர்களுக்கு) /காப்பாளருக்கு (காப்பாளர்களுக்கு)த் தெரிவியுங்கள் மற்றும் சாத்தியமான அளவில் துரிதமாக அந்த குழந்தைக்கு சிகிச்சை எடுத்திடுங்கள் என்று அறிவுறுத்துங்கள்
- பெற்றோர் (பெற்றோர்கள்) /காப்பாளர் (காப்பாளர்கள்), சிகிச்சை பற்றிய தற்பொழுதைய தகவல்களைப் பெறுவதையும், பின்-தொடர்ச்சி செய்யப்படுவதையும் மற்றும் தொடர்பாளரின் தடம் அறியப்படுவதையும் உறுதி செய்யுங்கள்
- வகுப்பறைக்கு வெளியே அந்தரங்கமான பகுதியில், உடன்பிறப்புத் தொடர்பாளர்களைப் பரிசோதியுங்கள்

## இணைப்பு D

### தலைப்பேன் அறிகுறிகள்

தங்களது குழந்தைகளின் தலைகளில் பேன் இருக்கின்றனவா என்று வாரம் ஒரு முறை பெற்றோர்கள்/கவனிப்பாளர்கள் சோதிப்பது மிக முக்கியம் ஆகும்.

தலைப்பேனின் ஒரு அறிகுறியாக தலை அரிக்கும் வரை காத்திருக்காதீர்கள். அரிப்பதை உணர்வதற்கு முன்பாக, குழந்தைகளுக்கு பல வாரங்களுக்கு முன்பே அவர்களது தலையில் பேன் இருக்கக்கூடும்.

பின்வருவனவற்றை நீங்கள் பார்த்தால், உங்களுக்கு தலைப்பேன் இருந்து வந்திருக்கின்றன என்பதை நீங்கள் அறிவீர்கள்:

- முடியில் உயிருள்ள பேன் இருப்பது. தலைப்பேன் மிகச் சிறியன, இறக்கை இல்லாதவை, சாம்பல் கலந்த பழுப்பு நிறம் கொண்ட பூச்சிகள் ஆகும். முடியை விலக்கும் பொழுது அவை வெகு துரிதமாக நகர்ந்து விடுவதால், அவற்றைப் பார்ப்பது சிரமமாக இருக்கிறது.
- தலைப்பேனின் முட்டைகள். புதிதாக இடப்பட்ட முட்டைகள், முடியின் தண்டுப்பாகத்துடன் ஒட்டிக் கொண்டுள்ளன மற்றும் அவை தலைச்சருமத்திற்கு மிக நெருக்கமாக இடப்படுகின்றன. அந்த முட்டைகள் ஊசிமுனையைக் காட்டிலும் சிறியதாக இருக்கின்றன, நீள்வட்ட வடிவம் கொண்டவை மற்றும் சாம்பல் நிறம் முதல் பழுப்பு நிறம் வரை நிறம் கொண்டுள்ளன. இந்த முட்டைகள் 7-10 நாட்களில் பொரிக்கின்றன. பேன், தலையின் மீது எந்தபாகத்திலும் முட்டை இடக்கூடும் என்றாலும் கூட, அதற்குப் பிடித்தமான இடங்களாக காதுகளைச் சுற்றிலும் உள்ள பகுதிகள் மற்றும் கழுத்தின் பின் பகுதி ஆகியவை ஆகும்.

பொது சுகாதார செவிலியர்
ஹால்டன் பொது சுகாதாரப் பிரிவு
ஹால்டன் பிராந்தியம்